TNKR080008382020

**உதவி அமர்வு நீதிமன்றம், குளித்தலை.**

**முன்னிலை : – திரு.ஈ.முத்துசாமி, பி.ஏ., பி.எல்.,**

**உதவி அமர்வு நீதிபதி, குளித்தலை**

**2026–ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 01–ம் தேதி சனிக்கிழமை**

**அமர்வு வழக்கு எண்.35/2020**

**CNR.No.TNKR08-000838-2020**

| | | |
|---|---|---|
| அரசுக்காக –<br>உதவி காவல் ஆய்வாளர்,<br>தோகைமலை காவல் நிலையம்,<br>காவல் நிலைய<br>குற்ற எண்.35/2020 | : | **குற்றமுறையீட்டாளர்** |
| முத்துசாமி<br>(வயது 36/2016)<br>த/பெ.மருதை,<br>களத்து வீடு,<br>மரவனூர்,<br>சமுத்திரம் அஞ்சல்<br>மணப்பாறை தாலுகா,<br>திருச்சி மாவட்டம். | : | **எதிரி** |
| இ.த.ச.பிரிவு 294(b), 436, 506(i)–ன் கீழ் தண்டிக்கக்கூடிய குற்றம். | : | **குற்றச்சாட்டுகள்** |

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 ம் நாளிட்ட R.O.C.No.814/2020/ RG/F1 (P.DIS.No.36/2021) உத்தரவின்படி CASE SUMMARY கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.

| Sl. No | CASE SUMMARY | | | | |
|---|---|---|---|---|---|
| i. | The period of remand of the accused | : | Name of the accused | Date of remand | Release on |
| 1 | | | முத்துசாமி | 23.08.2016 | |

| | | | | |
|---|---|---|---|---|
| ii. | Date of filing of the complaint/final report in the court | : | Filing of complaint | Filing of final Report |
| | | : | 23.08.2016 | 20.07.2020 |
| iii. | Date of committal of the case to the court of Sessions | : | குளித்தலை, நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 அவர்களால் முதல்நிலை விசாரணை பதிவேட்டு வழக்கு எண்.06/2020 ஆக 05.10.2020–ம் தேதி அன்று Committal செய்யப்பட்டுள்ளது. | |
| iv. | Date of questioning of the accused under section 228, 240, 246 and 251 of the Code of Criminal Procedure, 1973, as the case may be | : | 16.02.2021–ம் தேதி அன்று குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. | |
| v. | Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior courts, except routine petitions like petitions under section 317 of the code. | : | NIL | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| vi. | Date of Examination in chief and cross | | Name of the Examination | Date of Chief | Date of Cross |
| | | PW1 | சுதா | 21.07.2026 | 21.07.2026 |
| | | PW2 | யுவராணி | 21.07.2026 | 21.07.2026 |
| | | PW3 | மாணிக்கம் | 21.07.2026 | 21.07.2026 |
| | | PW4 | நாகு | 21.07.2026 | 21.07.2026 |
| | | PW5 | ராஜேந்திரன் | 21.07.2026 | 21.07.2026 |
| | | PW6 | சத்தியபிரியா | 30.07.2026 | 30.07.2026 |

| | | |
|---|---|---|
| Vi. | Date of examination of the accused under section 313 of | 31.07.2026 |

| | | |
|---|---|---|
| | the code | |
| Vii. | Details of ascendance of an accused and his appearance production, as the case may be and | NIL |
| ix. | Grant of stay by superior courts and the results there of | NIL |

| | | |
|---|---|---|
| குற்றம் சாட்டப்பட்ட நபர்களின் வாதுரை | : | எதிரி குற்றவாளி இல்லை |
| முடிவு | : | எதிரியின் மீதான இ.த.ச.பிரிவுகள் 294(b), 436 மற்றும் 506(i)–ன் கீழான குற்றச்சாட்டினை அரசு தரப்பானது நிரூபணம் செய்யவில்லை என்பதால் எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 235(2) சட்டப்பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| சொத்துகள் பற்றிய உத்தரவு | : | வழக்கு சொத்துக்களான சா.பொ.1 மற்றும் சா.பொ.2–ஐ மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் குற்றவியல் நடைமுறை சட்ட விதிகள் 2019 பிரிவு 263–ன் கீழ் அழிக்க உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு என் முன்பாக இறுதி விசாரணைக்காக 31.07.2026 ஆம் தேதியன்று வந்தபோது, தமிழக அரசுக்காக பொறுப்பு அரசு வழக்கறிஞர் திரு.D.கார்த்திக் மற்றும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பீர் முகமது, அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலித்தும், இன்று வரை இந்நீதிமன்ற பரிசீலணையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ...

## தீர்ப்புரை

**1)** இவ்வழக்கானது தோகைமலை காவல் நிலையத்தில் குற்ற எண்.376/2016 இ.த.ச பிரிவுகள் 294(b), 436 மற்றும் 506(i)–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு, புலன் விசாரணை முடித்து, குற்ற இறுதி அறிக்கையானது குளித்தலை நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றம் அவர்களால் முதல்நிலை பதிவேட்டு வழக்கு

எண்.06/2020 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, வழக்கு ஆவணங்களின் நகல்கள் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலனை செய்தபோது, எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச.பிரிவு 294(b), 436 மற்றும் 506(i)–ன் படியான குற்றமானது அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்கது என்பதால் இவ்வழக்கு கோப்பு கரூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு கு.வி.மு.ச.பிரிவு 209(அ)–ன் படி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**2)** இவ்வழக்கினை மாண்புமிகு கரூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம் கோப்பிற்கு எடுத்துக் கொண்டு, விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. இந்நீதிமன்றத்தில் இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தபோது, இவ்வழக்கின் எதிரி இ.த.ச பிரிவுகள் 294(b), 436 மற்றும் 506(i)–ன் கீழான குற்றங்கள் புரிந்துள்ளார் என அனுமானிக்கத்தக்க ஆதாரங்கள் இருப்பதாக தெரிய வரவே, எதிரியின் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 436 மற்றும் 506(i)–ன் படி குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு, எதிரிக்கு விளக்கி கூறி வினவியபோது, எதிரி மேற்படி குற்றச்சாட்டை மறுத்து பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறினார்.

**3)** அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக ஆறு சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், எட்டு சான்றாவணங்களும், இரண்டு சான்று பொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**4) குற்றப்பத்திரிக்கையின் சுருக்கம் :–**

இவ்வழக்கின் புகார்தாரர் சுதாவும், எதிரியும் கணவன் மனைவி. எதிரி முத்துசாமி அடிக்கடி மது அருந்திவிட்டு வீட்டிற்கு வந்து தகராறு செய்ததால் புகார்தாரருக்கும் எதிரிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு 8 வருடமாக எதிரியிடமிருந்து பிரிந்து தனது மகள் கோகிலாவுடன் ராக்கம்பட்டி என்ற ஊரில் தனது அம்மா வீட்டில் வசித்து வந்தார். இந்நிலையில் கடந்த 22.08.2016 ம் தேதி பகல் 12.00 மணிக்கு ராக்கம்பட்டியில் உள்ள தனது மாமியார் வீட்டிற்கு வந்த எதிரி புகார்தாரரை பார்த்து ஏண்டி தேவடியா புண்ட மகளே நீ என்னுடன் வாழ வரமாட்டியாடி என அசிங்கமாக திட்டியுள்ளார். அதற்கு புகார்தாரரும் சாட்சிகள் 2, 3 ஆகியோர் சேர்ந்து எதிரியை ஏன் அசிங்கமாக பேசுற என்று கேட்டதற்கு மீண்டும் எதிரி புகார்தாரரை நீ எவனடி வைச்சிருக்க ஒழுங்கா வீட்டுக்கு

வரமாட்டியா என அசிங்கமாக பேசி எதிரி சாட்சிகள் மூவரையும் பார்த்து உங்களுக்கு வீடு இருந்தால் தானே வாழமுடியும். இன்றைக்கு வீட்டை கொழுத்திவிடுகிறேன் பார் என சொல்லி புகார்தாரர் சுதா வீட்டு அடுப்படியில் இருந்த மண்ணெண்ணை கேனை எடுத்து அதிலிருந்த மண்ணெண்ணையை ஆஸ்பெட்டாஸ் மேற்கூரையுடன் சுற்றிவர கீற்றால் ஆன 1 முதல் 3 சாட்சிகள் குடியிருந்த வீட்டின் மீது ஊற்றி நெருப்பு பற்ற வைத்து ரூ.10,000/– மதிப்பிலான குடியிருப்பு வீடு மற்றும் வீட்டினுள் இருந்த பொருட்களுக்கு சேதத்தை ஏற்படுத்தியுள்ளார். பின் எதிரி சாட்சிகள் மூவரையும் பார்த்து இனிமேலாவது எங்கிட்ட வாழவரவில்லை என்றால் உங்கள் எல்லோரையும் கொல்லாமல் விடமாட்டேன் என சொல்லி கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக சட்டப்பிரிவு 294(b), 436, 506(i) IPC–ன் கீழ் தண்டிக்கப்படக்கூடிய குற்றத்தை புரிந்துள்ளார்.

5) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில், எதிரியின் மீதான குற்றச்சாட்டினை அரசு தரப்பானது தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

**6) அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் அடிப்படையில் வழக்கின் சுருக்கம் :–**

கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு நாள் அ.சா.1 அவரது ஊருக்கு அருகே உள்ள நடுப்பட்டியில் உள்ள ஒரு உறவினர் வீட்டிற்கு துக்க காரியத்திற்கு சென்று விட்டு பகல் 12 மணிக்கு அவரது வீட்டிற்கு வந்து பார்த்த போது அவரது வீடு தீ பற்றி எரிந்துக்கொண்டு இருந்தது. மேற்படி வீட்டை யார் தீ வைத்தார்கள் என்று அவருக்கு தெரியாது. மேற்படி சம்பவம் குறித்து அவர் எழுதாத வெள்ளை காகிதத்தில் கையெழுத்து மட்டும் செய்து தோகைமலை காவல் நிலையத்தில் அ.சா.ஆ.4 புகார் மனு கொடுக்க அதனை பெற்ற அ.சா.6 காவல் உதவி ஆய்வாளர் மேற்படி புகாரினை பெற்று தோகைமலை காவல் நிலைய குற்ற எண்.367/2016 இதச பிரிவுகள் 294(b), 436 மற்றும் 506(i)ன் கீழ் அ.சா.ஆ.5 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, நகலினை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பிக்கொண்டு ஒருநகலை விசாரணைக்கு

எடுத்துக்கொண்டு அன்றைய தினமே பகல் 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜேந்திரன், முருகேசன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.2 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 வரைபடம் தயார் செய்து, பின்னர் வழக்கின் சாட்சிகளான சுதா, யுவராணி, கமலா, மாணிக்கம், நாகு ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்து, பின்னர் பகல் 12.35 மணிக்கு சம்பவம் இடத்தின் அருகில் உள்ள சாட்சிகள் ராஜேந்திரன், முருகேசன் ஆகியோர் முன்னிலையில் வழக்கு சம்பவத்தில் பயன்படுத்தப்பட்ட சுமார் 3 லிட்டர் பிடிக்கக்கூடிய மண்ணெண்னை கேன் ஒன்றையும், எரிந்த நிலையில் உள்ள சாம்பல் சிறிதளவையும் கைப்பற்றி அ.சா.ஆ.3 கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து, பின்னர் மேற்படி சாட்சிகள் ராஜேந்திரன், முருகேசன் ஆகியோர்களை தனிதனியாக விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்து கொண்டு பின்னர் வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி முத்துசாமி என்பவரை 14.30 மணிக்கு கமுகூர் பஸ் ஸ்டாப் அருகே காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கும் வழக்கு சொத்தினை அ.சா.ஆ.7 படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிக்கொண்டு, 30.09.2016 ம் தேதி வழக்கு சொத்தினை புகைப்படம் கலைஞர் செந்தில்குமார் என்பவர் மூலம் அ.சா.ஆ.8 புகைப்படங்கள் எடுத்துக்கொண்டு மேற்படி செந்தில்குமாரை விசாரணை செய்து, புலன் விசாரணை முடித்து எதிரியின் மீது அதே சட்டப்பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**ஆ)** எதிரியின் மீதான குற்றச்சாட்டினை நிரூபணம் செய்வதற்கு முன்னிறுத்தியுள்ள அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகளை மேற்படி வழக்கு சம்பவம் தொடர்பாக புகார் கொடுத்ததாக கூறக்கூடிய அ.சா.1 அவரது முதல் விசாரணையில், சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு நாள் அவர் ஊர் அருகே உள்ள நடுப்பட்டியில் உறவினரின் துக்ககாரியத்திற்கு சென்றிருந்தேன் என்றும், பின்னர் அவர் வீட்டிற்கு வந்து பார்த்தபொழுத்து வீடு எறிந்திருந்தது என்றும், அப்பொழுது பகல் 12.00 மணி இருக்கும். யார் தீ வைத்தார்கள் என எனக்கு தெரியாது. வழக்கு பற்றி அவருக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் அவரை

விசாரிக்கவில்லை என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் அவருடையது தான். மேற்படி கையெழுத்தை எழுதாத காகிதத்தில் கையெழுத்து செய்து தோகைமலை காவல் நிலையத்தில் கொடுத்ததாகவும் கூறி பிறழ் சாட்சியாகியுள்ளார். அவ்வாறே, வழக்கு சமத்பவத்தை கண்ணுற்றதாக கூறக்கூடிய அ.சா.2 யுவராணி, அ.சா.3 மாணிக்கம் ஆகியோர்கள் "தங்களுக்கு யார் தீ வைத்தார்கள் என்று தெரியாது என்றும், போலீசார் தங்களை விசாரிக்கவில்லை" என்று கூறி பிறழ் சாட்சியாகியுள்ளார்கள். வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் சாட்சியம் அளிக்கவில்லை.

**இ)** புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் கொண்டு, எதிரியை குற்றவாளி என முடிவு செய்ய இயலாது. எதிரியின் மீதான குற்றச்சாட்டினை நிரூபணம் செய்வதற்கு அரசு தரப்பில் முன்னிறுத்தியுள்ள சாட்சிகள் அரசு தரப்பு சாட்சிகள் ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், எதிரியின் மீதான குற்றச்சாட்டியை அரசு தரப்பானது நிரூபணம் செய்யவில்லை. அரசு தரப்பானது தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்கள் வாயிலாக எதிரியின் மீதான குற்றச்சாட்டினை நிரூபணம் செய்யவில்லை என்பதால், வழக்கில் எழும் சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு வழங்கி, எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்யப்படுகிறது.

**7) முடிவாக,** எதிரியின் மீதான இ.த.ச.பிரிவுகள் 294(b), 436, 506(i)–ன் கீழான குற்றச்சாட்டினை அரசு தரப்பானது நிரூபணம் செய்யவில்லை என்பதால் எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 235(2) சட்டப்பிரிவின் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. வழக்கு சொத்துக்களான சா.பொ.1 மற்றும் சா.பொ.2–ஐ மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் குற்றவியல் நடைமுறை சட்ட விதிகள் 2019 பிரிவு 263–ன் கீழ் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை

திருத்தப்பட்டு இன்று 2026 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 01–ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN Digitally signed by MUTHUSAMY ESWARAN Date: 2026.08.01 18:18:42 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**
**குளித்தலை.**

**அரசு தரப்பு சாட்சிகள் :–**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | சுதா | புகார்தாரர் (பிறழ் சாட்சி) |
| 2. | அ.சா.2 | யுவராணி | கண்ணுற்ற சாட்சி (பிறழ் சாட்சி) |
| 3. | அ.சா.3 | மாணிக்கம் | கண்ணுற்ற சாட்சி (பிறழ் சாட்சி) |
| 4. | அ.சா.4 | நாகு | கண்ணுற்ற சாட்சி (பிறழ் சாட்சி) |
| 5. | அ.சா.5 | ராஜேந்திரன் | பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சி |
| 6. | அ.சா.6 | சத்தியபிரியா | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | | |
|---|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1. | புகார் மனுவில் உள்ள வாதியின் கையெழுத்து | அ.சா.1 (நிரூபிக்கப்படவில்லை) |
| 2 | அ.சா.ஆ.2. | பார்வை மகஜர் | அ.சா.5 (நிரூபணம் செய்யப்பட்டுள்ளது) |
| 3 | அ.சா.ஆ.3. | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.6 (நிரூபணம் செய்யப்பட்டுள்ளது) |
| 4 | அ.சா.ஆ.4. | புகார் மனு | அ.சா.1 |

| | | | |
|---|---|---|---|
| | | | (நிரூபிக்கப்ப டவில்லை) |
| 5 | அ.சா.ஆ.5. | முதல் தகவல் அறிக்கை | அ.சா.6 (நிரூபிக்கப்ப ட்டுள்ளது) |
| 6 | அ.சா.ஆ.6. | வரைபடம் | அ.சா.6 (நிரூபிக்கப்ப ட்டுள்ளது) |
| 7 | அ.சா.ஆ.7. | Form 95 | அ.சா.6 (நிரூபிக்கப்ப ட்டுள்ளது) |
| 8 | அ.சா.ஆ.8. | புகைப்படங்கள் (எண்ணிக்கை – 5) | அ.சா.6 (நிரூபிக்கப்ப ட்டுள்ளது) |

**சான்று பொருட்கள் :–**

| | | | |
|---|---|---|---|
| 1 | சா.பொ.1 | சுமார் 3 லிட்டர் பிடிக்க கூடிய வெள்ளை கலர் மண்ணெண்ணை கேன் ஒன்று | அ.சா.6 புலன் விசாரணை அதிகாரி |
| 2 | சா.பொ.2 | எரிந்த நிலையில் உள்ள கீற்றுடன் கூடிய சாம்பல் சிறிதளவு | அ.சா.6 புலன் விசாரணை அதிகாரி |

**எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–** இல்லை

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
Date: 2026.08.01 18:18:31 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**
**குளித்தலை.**

**குறிப்பு: –**

**1.** தீர்ப்பின் நகல் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**2.** வழக்கில் எந்த சாட்சியும் 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைத்து விசாரணை செய்யப்படவில்லை.

**3.** வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

==============================

உதவி அமர்வு நீதிமன்றம், குளித்தலை

S.C.No.35/2020

தேதி : 01.08.2026

AFT – அசல் / வரைவு தீர்ப்புரை

==============================